சுருக்கம்

பொதுவிநியோக திட்டம் – திருவாரூர் மாவட்டம் – கூத்தாநல்லூர் வட்டம் – சித்தனக்குடி நியாயவிலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து சித்தனக்குடி மெயின்ரோடு பகுதியில் புதிய பகுதி நேரக் கடை திறக்க அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஏ2) துறை

அரசு ஆணை (டி) எண். 48

நாள்: 26.02.2021
ஸ்ரீசார்வரி வருடம், மாசி – 14,
திருவள்ளுவர் ஆண்டு 2052,

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை (நிலை) எண்.63, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை நாள்.11.03.1997.
2. அரசு ஆணை (நிலை) எண்.214, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள். 15.10.1998.
3. அரசு ஆணை (நிலை) எண்.147, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள். 24.8.2006.
4. உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் கடிதம் எண். இசி1/26154/2020, நாள்.25.02.2021.

– – – –

**ஆணை:–**

பார்வை 1–3ல் படிக்கப்பட்ட அரசாணைகளில், பகுதிநேர நியாயவிலைக் கடை துவக்குவதற்கான வழிகாட்டி நெறிமுறைகள் வரையறுக்கப்பட்டு, அதற்கான முழு அதிகாரமும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகள் பொருந்தாதபோது, பகுதிநேர நியாயவிலைக் கடை திறப்பது இன்றியமையாதது என மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருதினால், அதற்காக அரசின் முன் அனுமதியைப் பெற வேண்டும் எனவும் மேற்குறித்த அரசாணைகளில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2. பார்வை 4–ல் படிக்கப்பட்ட கடிதத்தில், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் வட்டம், சித்தனக்குடி (18EP044PN) நியாயவிலைக் கடையிலிருந்து 155 குடும்ப அட்டைகளைப் பிரித்து சித்தனக்குடி மெயின்ரோடு பகுதியில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட கட்டடத்தில், வாரத்தில் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமை ஆகிய இரண்டு நாட்கள் மட்டும் செயல்படும் வகையில் புதிய பகுதிநேர கடையினை துவக்க அரசின் அனுமதியை கோரியுள்ளார்.

3. உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளரின் பரிந்துரையை ஏற்று, அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைத் தளர்த்தி, திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் வட்டம், சித்தனக்குடி (18EP044PN) நியாயவிலைக் கடையிலிருந்து 155 குடும்ப அட்டைகளைப் பிரித்து சித்தனக்குடி மெயின்ரோடு பகுதியில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட கட்டடத்தில், வாரத்தில் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமை ஆகிய இரண்டு நாட்கள் மட்டும் செயல்படும் வகையில் புதிய பகுதிநேர கடையினை திறக்க அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தயானந்த் கட்டாரியா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
ஆணையாளர்,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை–5.
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10.
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருவாரூர் மாவட்டம், திருவாரூர்.
இணைப்பதிவாளர்,
திருவாரூர் மாவட்டம், திருவாரூர்.
நகல்:–
மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர்
அவர்களின் நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–9.
கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலாளர்,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை–9.
இ.கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.